NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p2
**Date:** 9 August 2015

தேசிய தின விருதுகள் 2015: மொத்தம் 3,888 பேர் விருது பெறுகின்றனர்

# தனபாலனுக்கு நாட்டின் ஆக உயரிய விருது

வீ. பழனிச்சாமி

இவ்வாண்டு தேசிய தின விருது பெறுபவர்களின் பட்டியலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. அதன்படி மொத்தம் 3,888 பேருக்கு விருது வழங்கப்படவிருக்கிறது.

விருது பெறுபவர்கள் பட்டியலில் முதல் இடத்தைப் பிடித்து 'தி ஆர்டர் ஆஃப் தெமாசெக் (முதலாம் வகுப்பு)' விருதைப் பெறுகிறார் தெமாசெக் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் முன்னாள் தலைவரும் அதிபர் ஆலோசனை மன்றத்தின் உறுப்பினருமான திரு எஸ். தனபாலன்.

நேற்றோடு 78 வயதான திரு தனபாலன் சிங்கப்பூர் வரலாற்றில் எட்டாவது நபராக இந்த விருதைப் பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

1976ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் மக்கள் செயல் கட்சி வேட்பாளராக நிறுத்தப்பட்ட திரு தனபாலன், பின்னர் அமைச்சராக, வெளியுறவு, கலாசாரம், சமூக வளர்ச்சி, தேசிய வளர்ச்சி ஆகிய பல்வேறு அமைச்சுகளுக்குப் பொறுப்பேற்று, அமரர் திரு லீ குவான் இயூ, திரு கோ சோக் டோங் ஆகிய இரு பிரதமர்களுக்குக் கீழ் பணியாற்றினார்.


பின்னர் 1992ல் அரசியலை விட்டு விலகிய திரு தனபாலன் அதே ஆண்டில் மீண்டும் அரசாங்கத்தில் சேர்ந்து வர்த்தக தொழில் அமைச்சர் பொறுப்பை ஏற்றார்.

1993–1996 வரை சிங்கப்பூர் தொழிலாளர் அறநிறுவனத்தின் தலைவர், 1996–1998 வரை சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் நிறுவனத் தலைவர், 1996–2013 வரை தெமாசெக் ஹோல்டிங்ஸ் நிறுவனத் தலைவர், 1999–2005 வரை டிபிஎஸ் ஹோல்டிங்ஸ் குழுமத் தலைவர் என பற்பல பொறுப்புகளை வகித்துள்ள திரு தனபாலனுக்கு 2007ஆம் ஆண்டில் தேசிய தினத்தின்போது 'ஆர்டர் ஆஃப் தெமாசெக் (2ஆம் வகுப்பு)' விருது வழங்கி அரசாங்கம் கௌரவித்தது.


சிண்டா எனப்படும் சிங்கப்பூர் இந்தியர் மேம்பாட்டுச் சங்கத்தின் உருவாக்கத்துக்குக் காரணமானவர்களில் ஒருவரான திரு தனபாலன், அதன் தலைவராக 1996–2002 வரை இருந்தார்.



'தி ஆர்டர் ஆஃப் தெமாசெக் (முதலாம் வகுப்பு)' விருது – எஸ். தனபாலன்




மெச்சத்தக்க சேவை விருது – கோபிநாத் பிள்ளை



மெச்சத்தக்க சேவை விருது – கனகசபை குணாளன்



பொதுச் சேவை நட்சத்திர விருது – எம். அப்துல் ஜலீல்



பொதுச் சேவை நட்சத்திர விருது – கே. கார்த்திகேயன்



பாராட்டுப் பதக்கம் – அன்பரசு ராஜேந்திரன்

### 'தி ஆர்டர் ஆஃப் நீல உத்தமா (முதலாம் வகுப்பு)' விருது

விருது பெறுவோர் பட்டியலில் அடுத்த நிலை விருதான 'தி ஆர்டர் ஆஃப் நீல உத்தமா (முதலாம் வகுப்பு)' விருதைப் பெறுகிறார் சிங்கப்பூர் தேசிய முதலாளிகள் சம்மேளனத்தின் முன்னாள் தலைவரான 68 வயது திரு ஸ்டீவன் லீ சிங் யென்.

சிங்கப்பூர் ஏர்லைன்ஸ், என்டியுசி இன்கம் ஆகியவற்றின் தலைவராகவும் இருந்த திரு ஸ்டீவன் லீ, இதற்கு முன் அரசாங்கத்தின் பொதுச் சேவை நட்சத்திர விருதையும் பெற்றுள்ளார்.

### தனிச்சிறப்புமிக்க சேவை விருது

அதற்கு அடுத்த நிலையில் சிங்கப்பூரின் முதலாவது தற்காப்புப் படைத் தலைவரும் இஸ்ரேலுக்கான தற்போதைய சிங்கப்பூர் தூதருமான லெஃப்டினெண்ட் ஜெனரல் (பதவி ஒய்வு) வின்ஸ்டன் சூ வீ லியோங், சிங்கப்பூர் போலிஸ் படையின் முன்னாள் ஆணையாளரும் சுவிட்சர்லாந்துக்கான தற்போதைய சிங்கப்பூர் தூதருமான திரு டீ டுவா பா, வாழ்வதற்குரிய நகரங்கள் நிலைய ஆலோசனை மன்றத்தின் தலைவர் டாக்டர் லியு தை கெர், கரையோரப் பூந்தோட்டங்களுக்கான தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் டான் வீ கியட், புக்கிட் மேரா, தியாங் பாரு, தஞ்சோங் பகார் ஆகிய அடித்தள அமைப்புகளுக்கான முன்னாள் ஆலோசகர் திரு சிங் ஜிட் கூன், அல்ஜூனிட் அடித்தள அமைப்புகளுக்கான முன்னாள் ஆலோசகர் திரு சிடேக் சனிஃப் ஆகியோர் தனிச்சிறப்புமிக்க சேவை விருது பெறுகிறார்கள்.

### மெச்சத்தக்க சேவை (ராணுவம்) விருது

இம்மாதம் 18ஆம் தேதி தற்காப்புப் படைத் தலைவர் பொறுப்பிலிருந்து விலகும் லெஃப்டினெண்ட் ஜெனரல் இங் சீ மெங்குக்கு மெச்சத்தக்க சேவை (ராணுவம்) விருது வழங்கப்படுகிறது.

இவ்வாண்டு மார்ச் மாதம் 23ஆம் தேதி மரணமுற்ற சிங்கப்பூர் முதலாம் பிரதமர் அமரர் திரு லீ குவான் இயூவின் அரசு பூர்வ இறுதிச் சடங்கு ஏற்பாட்டுக் குழுவுக்கு லெஃப்டினெண்ட் ஜெனரல் இங் தலைமையேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விருது பெறும் இந்தியர்கள்

இவ்வாண்டு தேசிய தின விருதுகளை இந்தியர்கள் பலர் பெறுகிறார்கள். அவர்களில் இருவர் மெச்சத்தக்க சேவை விருதைப் பெறுகிறார்கள்.

ஒருவர் வெளியுறவு அமைச்சின் பொதுத் தூதரும் சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் தெற்காசிய ஆய்வுக் கழகத்தின் தலைவருமான திரு கோபிநாத் பிள்ளை.

"இந்த விருது கிடைத்ததில் மிகவும் பெருமையாக உள்ளது. தன்னலமற்ற சிறந்த சேவை புரிவோரை அரசாங்கம் நிச்சயம் கௌரவிக்கும். இந்த விருது என்னை சமூகத்துக்கும் நாட்டுக்கும் மேலும் நற்சேவையாற்ற ஊக்கமளிக்கிறது," என்று கூறினார் 78 வயது திரு கோபிநாத்.

இதற்கு முன் பொதுச் சேவை நட்சத்திர விருது, பொதுச் சேவை நட்சத்திர விருது (Bar) என இரு தேசிய தின விருதுகளைப் பெற்றிருக்கும் திரு கோபிநாத், அண்மையில் இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்துக்கான சிங்கப்பூரின் சிறப்புத் தூதராகவும் நியமிக்கப்பட்டார்.

மெச்சத்தக்க சேவை விருதைப் பெறும் மற்றோர் இந்தியர் முன்னாள் குறுகிய தூர ஓட்டப்பந்தய வீரரும் சிங்கப்பூர் திடல்தடச் சங்கத்தின் பயிற்சி மற்றும் தேர்வுப் பிரிவின் துணைத் தலைவருமான திரு கனகசபை குணாளன்.

"நான் எப்போதும் விருதுக்காகப் பணியாற்றியதில்லை. கடினமாக உழைத்தால் வெற்றியும் அங்கீகாரமும் தானாகத் தேடிவரும்," என்று கூறும் 73 வயது திரு குணாளன், இதற்கு முன் தாம் ஆசிரியராக இருந்தபோது 1976ஆம் ஆண்டு தேசிய தினத்தின்போது திறன் பதக்கம் பெற்ற தகவலைப் பகிர்ந்து கொண்டார்.

இந்த ஆண்டு விருது கிடைத்தது தமக்கு மேலும் பெருமையைச் சேர்த்துள்ளது என்று கூறும் திரு குணாளன், தமது பணிகள் அங்கீகரிக்கப்பட்டதில் மன நிறைவு அடைவதாகக் குறிப்பிட்டார்.

### பொதுச் சேவை நட்சத்திர விருது

அடுத்து, பொதுச் சேவை நட்சத்திர விருது பெற்றவர்களில் இந்தியர்கள் அறுவர் உள்ளனர். இயோ சூ காங் சமூக மன்ற மேலாண்மைக் குழுத் தலைவர் திரு ஏ. மறைமலை மாறன், வடமேற்கு சமூக மேம்பாட்டு மன்றத்தின் உறுப்பினர் திரு சந்திர மோகன் ரத்னம், தென்கிழக்கு சமூக மேம்பாட்டு மன்றத்தின் உறுப்பினர் திரு ஆதம் அப்துர் ரஹ்மான், பசிபிக் தீவுகள், ஃபிஜி ஆகியவற்றுக்கான சிங்கப்பூரின் தூதர் திரு வர்கிஸ் மெத்யூஸ், நியமன நாடாளுமன்ற உறுப்பினர் திரு கே. கார்த்திகேயன், யூனோஸ் குடிமக்கள் ஆலோசனை மன்றத்தின் புரவலர் ஹாஜி ஷேக் முகம்மது அப்துல் ஜலீல் ஆகியோரே அவர்கள்.

"கடந்த 20 ஆண்டுகளாக யூனோஸ் குடிமக்கள் ஆலோசனை மன்றத்தின் புரவலராகச் சேவையாற்றி வருகிறேன். வழக்கம்போல எனது சேவைகளை நான் தொடர்ந்து கொண்டிருக்கிறேன். அதற்காக விருதுகளை நான் எப்போதும் எதிர்பார்த்ததில்லை.

"இருப்பினும் இந்த பொன்விழா ஆண்டில் இந்த மதிப்புமிக்க விருது கிடைத்ததில் மகிழ்ச்சி," என்றார் 59 வயதாகும் மினி என்வைரன்மெண்ட் சர்வீஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் பிரபல உள்ளூர் கொடைவள்ளலுமான திரு அப்துல் ஜலீல்.

### பாராட்டுப் பதக்கம்

விருது பெற்ற இந்தியர்களுள் உமறுப் புலவர் தமிழ் மொழி நிலையத்தின் இயக்குநரான 43 வயது திரு அன்பரசு ராஜேந்திரனும் ஒருவர். அவர் பாராட்டுப் பதக்கத்தைப் பெறுகிறார்.

மற்றோர் குறிப்பிடத்தக்க அம்சமாக, அண்மையில் கினபாலு நிலநடுக்கப் பேரிடரில் தங்கள் உயிரைக் கொடுத்து மாணவர்களைக் காப்பாற்றிய தஞ்சோங் காத்தோங் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சார்பில் அவர்களின் குடும்பத்தினரிடம் பாராட்டுப் பதக்கம் ஒப்படைக்கப்படும்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.